(இ) 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவகத்தனரில் செயற்படுத்தப்பட்ட 39 பட்டப்பின் படிப்பு மற்றம் டிப்ளோமா பாடநெறிகளுக்காக எந்தவொரு மாணவரும் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) International Development Research Centre (IRDC)சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிறுவகம் இடமிருந்தும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிலிருந்தும் மானியங்களின் கீழ் ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,614,830 தொகை 02 முதல் 03 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முறையான இடமாற்ற கொள்கையொன்றின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படாமையால் 22 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகள் முதல் 34 ஆண்டுகள் வரையான காலப்பகுதியல் ஒரே இடத்தில் சேவையாற்றி வந்தனர்.

**ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

**விவசாய விஞ்ஞான பட்டபின்படிப்பு நிறுவகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம்கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைக்கான பதில்**

| 1.2 | நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள் | |
|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 43 இன் 90 வது பந்தியின் படி, நிலையான சொத்துக்களைத் மதிப்பீடு செய்வது தொழில்துறை சார்ந்த ஒருவரால் செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா ஆன நிலையான சொத்துக்கள் மீள் மதிப்பீடு தகைமையான துறைசார் உறுப்பினர் ஒருவரால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 43 இன் 90 வது பந்தியின் படி, நிலையான சொத்துக்களைத் மதிப்பீடு செய்வது மதிப்பீட்டு தொழில்துறை சார்ந்த ஒருவரால் செய்யப்பட வேண்டிய போதிலும், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் குறைந்த பதவியணியினர் காரணமாக சேவைகளை வழங்குவதில் சிரமம் காரணமாக உரிய திகதியில் மீள்மதிப்பீட்டு செயற்பாடுகளை பூர்த்தி செய்வதில் சிரமம் காரணமாக கணக்குத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின்படி (இணைப்பு 1) இற்கு காணி, கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற நிலையான சொத்துகளைத் தவிர மற்ற சொத்துக்களின் மதிப்பீட்டை ஆளும் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட குழுவால் செய்ய முடியும். அதற்கு இணங்க வாகனங்களின் மதிப்பீடு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்து தகுதி வாய்ந்த தொழில்முறை மதிப்பீட்டாளராலும் ஏனைய சொத்துக்கள் ஆளுகை தரப்பினரால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிவாய்ந்த குழுவின் மூலம் நிறைவேற்றப்பட்டது. இக்கழுவிற்காக முகாமைத்துவ சபை அங்கீகாரம் 202 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 71 வது பந்தியின் படி, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலக வைப்புக்கள் பெறுமதி நடைமுறை மற்றம் நடைமுறை அல்லாத பொறுப்புக்களாக இனங்காணப்பட்டு நிதி நிலைமைக்கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | நூலக வைப்புத்தொகை கோரலுக்கு ஏற்ப கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பொறுப்பாகும். இங்குள்ள நடைமுறைச் சூழல் என்னவென்றால், மாணவர்களுக்கு வழங்கப்படும் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காலப்பகுதிக்குள் மாணவர்கள் பட்டப்பின் படிப்பை முடிக்கவும், திரும்பப் பெறவும், கைவிடவும், பட்டத்தை மேம்படுத்தவும், (Upgrade the Degree), பட்டத்தை எந்த நேரத்திலும் தரம் தாழ்த்தவும் (Downgrade the Degree) முடியும். கிடைக்கும் தன்மையை சரியாக தீர்மானிக்க இயலாது. நூலக வைப்பு கோரிக்கைகள் எப்போதும் மேற்கொள்ளப்படலாம். அதன்படி, இரண்டு ஆண்டு பட்டப்பின்படிப்பை ஓராண்டில் முடித்தால் நடைமுறை |

| | | |
|---|---|---|
| | | அல்லாத பொறுப்பின் கீழ் வரும். இது மிகவும் சிக்கலான செயலாகும்.<br>இலங்கை பொது கணக்கீட்டு நியமங்கள் 1 இன் 70 ஆம் பந்தியின் படி, நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத கடன்கள் தற்போதைய மற்றும் நடைமுறை அல்லாத கடன்களாக அங்கீகரிக்கப்பட்டு காட்டப்பட வேண்டிய போதும் 74 ஆம் பந்தியின் பிரகாரம் திரவத்தன்மையின் பிரகாரம் வழங்கும் அனுமதிக்கிறது. முன்மொழிவு சாதாரணமாக இருக்கும்போது திரவத்தன்மையினை தெளிவாக அடையாளம் காண முடியாது, 81 ஆவது பந்தியின் பிரகாரம்கால எல்லை 12 மாதங்கள் என் கருதி பொறுப்புக்களை வகைப்படுத்தலாம். அதன் பிரகாரம் நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்பாக என துல்லியமாகவும் தெளிவாகவும் அடையாளம் காண முடியாத, நிதிக்கூற்றுக்களில், நூலக வைப்புத்தொகையை நடைமுறைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பது சரியானது. |
| (இ) | 2022 மே 05 ஆந் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 09/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 மே 10 முதல், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் மின்பறிப்பாக்கிகள் தனித்தனி சொத்து வகுப்புகளாக அடையாளம் காணப்பட்டு முறையே 25 சதவீதம் மற்றும் 10 சதவீதம் என்ற விகிதத்தில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். நிறுவனம் மேற்படி சுற்றறிக்கைக்கு முரணாக செயற்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் தேய்மானத்தை கணக்கிட்டதில், விளையாட்டு பொருட்கள் ரூபா.14,023.00 அதிகமாகவும், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் ரூ.53,864.00 குறைவாகவும் தேய்மானம் செய்யப்பட்டிருந்தன<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | சொத்து மீள்மதிதிப்பீட்டுக் குழுவிற்கு பரிந்துரை செய்தல், அங்கீகாகரம்அளித்தல் மற்றும் ஆவணங்களைத் தயாரித்தல் போன்ற அடிப்படை விதிகளுக்குப் பிறகு, நவம்பர் 2022 இல் சொத்து மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இங்கே சொத்துகளின் பெறுமதி 01.01.2022 திகதியுடன் தொடர்புடையவை மற்றும் அந்த திகதியின் சந்தை பெறுமதிஅடிப்படையில் சான்றுகளின் , அடிப்படையில் நியாயமான பெறுமதிவழங்கப்பட்டது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம ,லக்கம். 07 ஆம் பிரிவின் 42 இன் படி, ஆதனங்கள்,பொறிகள் மற்றும் உபகரணங்களின் கூறப்பட்ட பெறுமதி, அதாவது கணக்காய்வு திகதியில் அதன் நியாயமான பெறுமதி, பின்னர் திரட்டிய தேய்மானம் மற்றும் அதைத் தொடர்ந்து திரட்டப்பட்ட சேதங்களைக் கழித்த பிறகு. இழப்புகள் பதிவு செய்யப்பட வேண்டும்.2022.01.01க்கான 5மூ தேய்மான வேறுபாடு, மீட்டெடுக்கக்கூடிய தொகையுடன் சேர்த்தல், மின்பிறப்பாக்கிகளுக்கான 10% தேய்மான வேறுபாடு, மீட்டெடுக்கக்கூடிய தொகையில் இருந்து கழிக்கப்படுகிறது மற்றும் நியமத்தின் 76 வது பிரிவின்படி, சொத்தின் பயனுள்ள வாழ்நாள் முழுவதும் எளியமுறையில் தேய்மானம் ஒரே பெறுமானத்தேய்வு |

| | | |
|---|---|---|
| | | தொகையின் அடிப்படையில் புதிய சதவீதத்தின் அடிப்படையில் தேய்மானத்தைக் கணக்கிட்டோம். |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களின்படி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விலை மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா267,425,172.00 ஆக இருந்த போதிலும், நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் படி ரூபா 98,066,234.00 ஆக இருந்தது மற்றும் ரூபா.169,358,937.00 வேறுபாடு காணப்பட்டது.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | கட்டிடங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் இதழ்கள், நில மேம்பாட்டுத் திட்டங்கள், அலுவலக உபகரணங்கள், ஆய்வுகூடம் மற்றும் கற்பித்தல் உபகரணங்கள், மர தளபாடங்கள் மற்றும் சாதனங்கள், கணினிகள் மற்றும் ஆடியோ உபகரணங்கள், தொலைபேசிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள், வாங்கிய தஜகதி, கட்டளை இலக்கம் திகதி போன்ற நிலையான சொத்துகளைத் தவிர்த்து. உருப்படி, பட்டியல் திகதி, வாங்குபவர் மற்றும் தொடர்புடைய விவரங்கள், பொருட்களின் தன்மை மற்றும் பிற அனைத்து விவரங்களும் ஒரு விரிவான கணினி கோப்பில் பராமரிக்கப்படுகின்றன, இதன் மூலம் அத்தியாவசிய தகவல்களை மாத்திமே கொண்ட வருடாந்த நிலையான சொத்து பதிவேடு அச்சிடப்பட்டு புத்தகமாக கணக்கதய்விறடகு சமர்ப்பிக்கப்படுகிறது. அதன் ரூபா 98,066,234 பெறுமதியான சொத்துக்கள் உள்ளடங்கும்.<br><br>ரூபா 169,358,937 கிரயத்திலான கட்டிடங்கள், நூலகப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள், நில வடிவமைத் திட்டங்களின் நிலையான சொத்துகளில் மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு உருப்படிக்கும் அதிக அளவு தகவல்கள் இல்லாததால், அத்தியாவசியத் தகவல்கள் அடங்கிய தனி ஆவணம் கணக்காய்விறகு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>இது தவிர, அனைத்து நிலையான சொத்துகளின் வருடாந்த தேய்மானம் கணக்கிடப்பட்டு, வருடாந்த தேய்மான அறிக்கையுடன் ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

| 1.3 | சட்டங்கள், விதிகள், ஏற்பாடுகளுடனான தொடர்பு | |
|---|---|---|
| | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜூன் 02 திகதிய PED/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்தி<br><br>8.2.2 பந்தி நிறுவகத்திலுள்ள மிகை பணத்தை முதலீடு செய்யும் போது நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 50,000,000 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன..<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் XI ஆம் பிரிவு மற்றும் 2013 ஜூன் 02 திகதிய PED/02 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 பந்திக்கு இணங்க 2022 ஆம் ஆண்டின் டிசம்பர் 30 ஆந் திகதி இதில் காணப்பட்ட மிகை பணத்தை நிலையான வைப்பிலிடுவதற்கு நிதி அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தலைவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் செயலாளர் , கல்வி அமைச்சு ஊடாக நிதி அமைச்சின் செயலாளருக்கு 2022 10. 20 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது இதற்காக விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் முகாமைத்துவ பரிந்துரை 2022.07.24 ஆம் திகதி நடைபெற்ற 262 ஆம் கூட்டத்தின் போது பெற்றுக் கொள்ளப்பட்டது பின்னர் 2022.11.09 ஆம் திகதி கடிதத்தின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான கணக்காளரால் முதலீட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக சட்டத்தின் ஏற்பாடுகளில் மாதிரி பத்திரம் இணங்க தகவல்கள் வழங்குமாறு கோரப்பட்டுள்ளதுடன் 2022.11.11 ஆம் திகதி அது பூர்த்தி செய்யப்பட்டு மீண்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.(பின்னிணைப்பு 2) அதன் பின்னர் திசெம்பர் 30 ஆந் திகதி வரை அங்கீகாரம் கிடைக்காத போதும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணக்காய்வு சுற்றறிக்கை இயக்கம் 2/2019 மற்றும் 4/2011 ஆம் சுற்றறிக்கைகளுக்கு இணங்க அரச வங்கியில் விலை ககோரல் நடைமுறையின் கீழ் நிலையான வாய்ப்புகள் கோரப்பட்டு ஆகக் கூடிய வட்டி விகிதம் சமர்ப்பித்த மக்கள் வங்கியில் ரூபா 5,000,000 ஆன நிலையான வைப்பு ஒன்று மூன்று மாதங்களுக்கு வைப்புச் செய்யப்பட்டது .நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுப்பதால் விலை கூட்டின் வழங்குகாலமும் மூன்று நாட்கள் மாத்திரமாக இருப்பதாலும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு தான் பின்னர் முதலீட்டு நடவடிக்கைகள் ஈடுபடுவது ஆண்டின் மிகை நிதியை உரிய தேதியில் முதலீடு செய்யும் நடைமுறை சிக்கலுக்கு முகங்கொடுக்க நேர்வதால் நிதி அமைச்சரின் அங்கீகாரம் கிடைக்கும் வரை நிறுவனத்தின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் கீழ் முதலீடு செய்யப்பட்டது |

| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய PE/01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | |
|---|---|---|---|
| i. | 5.1.3 ஆம் பந்தி | 03 ஆண்டுகளுக்கு குறையாத காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆரம்பிப்பதற்கு முன்னர் குறைந்தது 15 ஆண்டுகளுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, திறைசேரி, வரிசை அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022-2026 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் அந்நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. (தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | இம்முறை கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கும் போது பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்து அதனை மேற்கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்தவுடன் அதற்காக கலந்துரையாடல் சுற்றுக்கள் பல நடத்தப்பட்டன அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் நிறுவனத்தின் முகாமைத்துவ சபை அதிகாரத்தின் கீழ் 08.04. 2022-ம் திகதி வரிசை அமைச்சுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது பின்னிணைப்பு இலக்கம் 3 |
| ii. | 6.5.3 ஆம் பந்தி | நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் நிறுவகத்தின் கணக்காய்வு அறிக்கையுடன் முன்னைய ஆண்டின் செயலாற்றல் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டின் ஆண்டறிக்கை இதுவரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. (தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | ஆண்டறிக்கை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பதற்காக திகதியொன்றை பெற்றுக் கொள்வதற்கு அது 2022.08 18 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது அதன் பிரகாரம் உயர்கல்வஜ அமைச்சு 2022.09.16 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்திற்காக ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதாக நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு அமைச்சினால் அறிவிக்கப்பட்ட திகதியான 27.'.3.'.2023 ஆம் திகதி ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நிறுவனம் நடவடிக்கை எடுத்தது பின்னிணைப்பு இலக்கம் 4 |
| (ஈ) | 2014 பெப்ரவரி 11 திகதிய 04/2014 ஆம் இலக்க முகாமைத்துவ | ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக முகாமைத்துவ குழுவின் அங்கீகாரமின்றி மற்றம் இடைக்கால அல்லது இறுதி ஆராய்ச்சி அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்படாமல் 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 | 2014 பெப்ரவரி 6 ஆம் திதிய 02/2014 ஆம் ,லக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு ஆராய்ச்சி படிகள் கொடுப்பனம் செய்யும்போது அவர்களின் ஆராய்ச்சி முன்மொழிவுக்காக பல்கலைக்கழக பேரவையின் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி முகாமைத்துவ குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.இதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | சேவைகள் சுற்றறிக்கை | ஆந் திகதி வரையான காலப்பகுதியில் 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 8,819,379 ஆன ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்பட்டிருந்தன..<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | இணங்க விவசாய விஞ்ஞான பட்ட பின்படுப்பு நிர்வாகத்தின் ஆராய்ச்சி பணிகள் உரித்துடைய அனைத்து உத்தியோகத்தர்களும் கல்வி சாரா பிரிவின் பிரதி பதிவாளர் ஊடாக உபவேந்தரின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்தோம் பணிப்பாளர் மற்றும் உதவி நூலகர் கல்வி நிறுவன பிரிவின் பதிவாளர் ஊடாக உபவேந்தரின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது சுற்றறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்ட முதல் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி முகாமைத்துவக் குழு ஒன்று காணப்பட்டதுடன் அதன் பரிந்துரையின் பபேரில் உபவேந்திரன் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பவுகள் செய்யப்பட்டன எனினும் அக்குழு பின்னைய காலப்பகுதியில் செயற்பாடாமல் இருந்த போதும் 2022 முதல் மீண்டும் செயற்பட்டு அந்த ஆராய்ச்சியாளர்களுக்குரிய விடயம் தொடர்பான நிபுணத்துவ விரிவா விரிவுரையாளர்களுக்கு அனுப்பி ஆராய்ச்சி முன்வழிகளை மதிப்பீடு செய்து சேர்க்க வேண்டிய விடயங்களை சுட்டிக்காட்டி சரி செய்யப்பட்டு ஆராய்ச்சி முன்மொழிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது தற்போது காணப்படும் பரிந்துரைகளின் பிரகாரம் இடைக்கால ஆராய்ச்சி அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையை தயாரிப்படுகின்றது ஆராய்ச்சி பணிகள் இதுவரை உத்தியோகத்தர் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி முன்மொழிகளின் இடைக்கால மற்றும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சமர்ப்பிப்பதற்கு பரிந்துரை கிடைத்த கிடைத்தால் சமர்ப்பிக்கப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகள் தொடர்பான அனைத்து அறிக்கைகளும் கல்வி மற்றும் கல்வி சார்ந்த பிரிவு இடம் உள்ளது கொடுப்பனவு பரிந்துரை கடிதம் மாத்திரம் விவசாய பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் கணக்கு பிரிவில் கணக்கு பிரிவிற்கு வழங்கப்படும் (பின் இணைப்பு ,லக்கம் 5) |
| (உ) | **2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை** | | |
| i. | 4.5 ஆம் பந்தி | (அ) மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்ட 60 பட்டப்பின் படிப்புகளின் பாதீட்டு ஆவணங்கள் தயாரிக்கப்படவில்லை.<br><br>(தொடர்பு CPCG/KD/D/PGIA/2022/37(1)) | எமது நிறுவகத்தினால் 60 பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் முன்வைக்கப்பட்டிருந்த போதும் அந்த 60 பாடநெறிகளும் 11 கல்வி சபைகளின் கீழ் செயல்படுத்தப்படுகிறது தயாரிக்கப்படுகின்றது பாதீட்டு ஆவணங்களை தயாரிக்கும் போது கல்விச் சபைகள் என்ற வகையில் மேற்படி அனைத்து பாடநெறிகளையும் மேவுகை செய்யும் வகையில் |

| | | |
|---|---|---|
| | (அ)சுயநிதியிடல் செயற்பாடுகளுக்குரியதாக நடாத்தப்பட்ட பாடநெறிகளின் இறுதியில் அதற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வயையான காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட 35 பாடநெறிகளில் இருந்த உழைத்த ரூபா 318,338,875 ஆன வருமானத்திற்காக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அத்தோடு மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த 40 பட்டப்பின் படிப்பு பாடநெறிகளின் பாதீடும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/37(1)) | தயாரிக்கப்படுகின்றது. இவ்வாறு 11 பாதீட்டு ஆவலணங்கள் தயாரிக்கப்பட்டு முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.<br><br>இங்கு நடைபெறுகின்ற பாடநெறிகளில் குறைந்தபட்ச காலத்திற்குள் படிப்புகளை பூர்த்தி செய்தல் நடைமுறையில் சாத்தியமில்லை. மாணவர்கள் தங்கள் விருப்பப்படி படிப்பை முடிப்பதால், இந்த செலவுகள் குறைந்தபட்ச காலத்தை விடவும், அதிகபட்ச காலத்தை மீறும் பல நிகழ்வுகள் உள்ளன. ஆனால் ஒவ்வொரு செலவினத் தலைப்பின் கீழும் அடையாளம் காணப்பட்ட செலவினப் பதிவேடுகள் தனித்தனியாகப் பராமரிக்கப்பட்டு வரம்பை மீறுகிறதா எனச் சரிபார்க்கப்படுகிறது. ஆனால் மற்ற குறுகிய பாடநெறிகளில் (Workshop, Short Course etc.)இந்த செலவினத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்ட பணத்துடன் தொடர்புடைய செலவுகள் ஏனைய குறுங்கால பாடநெறிகளின் உட்பட குறுங்காலத்தில் இனங்காண முடியாது<br><br>• விரிவுரையாளர்களின் விரிவுரைக் கட்டணத்தை அவர்கள் கற்பித்த பிறகும் பல ஆண்டுகளாகக் கோராமை.<br><br>• போதுமான எண்ணிக்கையிலான மாணவர்கள் பதிவுசெய்யும் வரை சில நடைமுறைப் பாடங்களை பல ஆண்டுகளாக வழங்குவதில்லை. (Field Visit, Outbound Training Programme)<br><br>இதன் கீழ், 2019, 2020, 2022 ஆகிய அனைத்து கல்வி ஆண்டுகளையும் இணைத்து, கடந்த கோவிட் 19 தொற்றுநோய் காலத்தில் நடத்தப்பட இருந்த களப்பயணம் (Field Visit) 2023 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. (கல்வி ஆண்டு 2021 தவிர்க்கப்பட்டது) |

| | | | |
|---|---|---|---|
| ii. | 5.2.1 ஆம் பந்தி | சுயநிதியிடல் செயற்பாடுகளின் மொத்த கூட்டுப்பெறுமதியில் 15 சதவீதம் முதல் 30 சதவீதம் வரையான அளவில் நிறுவகத்தின் பொது மேந்தலை கிரயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வயான தயாரிக்கப்பட்ட 16 பாதீடுகளை உள்ளடக்கிய ரூபா 125,294,096.00 ஆன பாதீடு செய்யப்பட்ட வருமானத்தில் பொதுக் கிரயத்திற்காக உரிய ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. (தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/37(1)) | • மாணவர்கள் தங்கள் பட்டப்படிப்பை முடித்த பிறகு பல வருடங்கள் திரும்பப்பெறக்கூடிய வைப்புத்தொகை (Refundable Deposits) மீள கோரப்படாமை.<br><br>இந்தக் காரணங்களால், கூடிய கால அவகாசம் தாண்டியிருந்தாலும், தொடர்புடைய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது நடைமுறையில் கடினமான பணியாகவே உள்ளது.<br><br>ஆனால் தற்போது 2016 மற்றும் 2017ஆம் கல்வியாண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களை தயாரிக்க தேவையான அடிப்படை தகவல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.<br><br>04/2016 ஆம் சுற்றறிக்கையின் 5.3 பிரிவின் படி, ஒவ்வொரு கல்வி சபையின் வருமானத்தில் குறைந்தபட்சம் 20% மற்றும் அதிகபட்சம் 35% சதவீதத்திற்கு உட்பட்டது, நிறுவனத்தின் உள்கட்டமைப்பு மேம்பாடு உட்பட அனைத்து நிறுவன செலவினங்களுக்காகவும் பெறப்படுகிறது. 5.1.5, 5.2.1 மற்றும் 5.2.2 ஆகிய அனைத்து தலைப்புகளையும் தொகுத்து இந்த சதவீதம் தீர்மானிக்கப்படும். ஒவ்வொரு கல்வி சபையின் வருமானத்தின் படி (அதிக வருமானம் கொண்ட கல்வி சபைகளின் அதிக சதவீதமாக) 5.1.5 தலைப்பின் கீழ் தொடர்புடைய சதவீதத்தைப் பெறுவோம், எனவே மீண்டும் பத்தி 5.2.1 இன் படி பண ஒதுக்கீடு சரியாக செய்யப்படாது. ஆய்வுக் குழுக்கள் சார்பாக ஏற்படும் சிறிய செலவுகளை நிறுவனமே ஏற்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன. |

| | | |
|---|---|---|
| 2.2.3 | **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் தவிர நிறுவகத்தின் வளங்கள், சிக்கனமாகவும் செயற்திறனாகவும் காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்க பெறுகை செய்து பயன்படுத்திவில்லையெனவும்** | |
| (அ) | ரூபா 21,000,000 தொகையான கணக்கீட்டு மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக தனியார் கம்பனியொன்றுடன் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 2,100,000 இற்கு உடன்படிக்கையொன்ற செய்யப்பட்டு அவ்வாண்டிலேயே ரூபா 1,500,000 தொகை முற்பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் முடிவடைந்து 05 வருடங்களுக்கு மேற்பட்டிருந்த போதும் கணனி முறைமை நிறுவப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | கணக்கிட்டு முறைமையின் கணக்கிட்டு இறுதி பயன்பாட்டாளரான அதன் பாவனையின் போது முகங் கொடுக்கும் சிக்கல்கள் தொடர்பாக இவ்வாண்டில் ஆரம்பத்தில் தயாரிப்புக் கம்பெனியுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னர் சிக்கல்களை தீர்வுசெய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதில் 60% ஆன அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது அவ்வாறே இறுதி பயன்பாட்டாளரான அம் முறைமையின் மாதிரி ஒன்று நாளாந்த நடவடிக்கை கோவை செய்வதற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் முறைமையின் நிரந்தர பயன்பாட்டுக்க எடுப்பது தொடர்பாக உறுதிப்படுத்துதல் அதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது அவ்வாறு இந்த பெறுபேறுகள் தயாரிப்புக் கம்பனி மற்றும் கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் ஆண்டின் இறுதி வரையில் முடிவடைவதற்கு முன்னர் கணக்கீட்டு பிரிவின் தரவு முகாமை நடவடிக்கைகளுக்காக கணக்கிட்டு முறைமையில் சேர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளது. |
| (ஆ) | பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்காக தேவையான உபகரணங்கள் போதியளவில் இருக்கும் போது விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் ரூபா 20,573,206 பெறுமதியான பொருளிருப்பு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்திற்காக வழங்கப்பட்டிருந்தது.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்திடம் ஆய்வுக்கூட வசதிகள் இல்லாமையா பட்டப்பின் படிப்பு மாணவர்களின் செய்முறை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை செய்வதில் சிக்கல்களுக்கு தீர்வு ஒன்றாக பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான பீடத்தில் ஆய்வுகூட வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு நிறுவனத்திற்கு நேர்ந்துள்ளது நிறுவனத்திற்காக ஆய்வு கூட ஒன்றை நிர்மாணிப்பதற்கு தகைமையுடன் கூடிய உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு அதிக கிரயம் ஏற்படும் செயற்பாடாக இருப்பதால் பீடத்தின் ஆய்வுக்கூடத்தை இணைந்து பயன்படுத்துவது தற்போதைய நிலைமையின் கீழ் மிகவும் பொருத்தமாக இருப்பதால் அந்த ஆய்வுக்கூடங்களில் இல்லாத பட்டப்பின் படிப்பு மற்றும் ஆராய்ச்சி மற்றும் செய்முறை பயிற்சிகளுக்காக அத்தியாவசிய விஞ்ஞான உபகணங்களை கல்விச் சபைகளின் வேண்டுகோளுக்கு இணங்க அந்த கல்வி சபைகளுக்கு |

| | | |
|---|---|---|
| | | வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது நிறுவனத்தின் ஆரம்ப நோக்கங்களின் பிரகாரம் செயற்பட்டு மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான செய்முறை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கை மேற்கொள்வதற்காக சந்தர்ப்பம் வழங்குதல் அடிப்படை நோக்கமாகும் மேலும் இவ்வாறு கொள்வது செய்யப்பட்ட உபகரணங்கள் தற்காலிகமாக அந்த ஆய்வுக்கூடங்களில் வைக்கப்பட்டுள்ளவுடன் வைக்கப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் நிறுவனத்திற்காக ஆய்வுக்கூடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் அந்த அனைத்து உபகரணங்களும் அதில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 14,150,000.00 ஆன 05 பெறுகைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | பெறுகைத் திட்டத்தில் உள்ளெடுக்கப்பட்ட அளவு இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டதுடன் கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்வனவு அவ்வாண்டின் இறுதியில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது தான் அவ்வாண்டு நட்பா அதில் அரசினால் அரசின் அரசு சுலைகளின் வரிசை நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டதா |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நிறுவகத்தில் செயற்படுத்தப்பட்ட 2 5பட்டப்பின் படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகள் மற்றும 2018 முதல் 2022 ஆம் ஆண்டு வழைரயான காலப்பகுதிக்காக மேலும் 15 பாடநெறிகளுக்காக எந்தவொரு மாணவரும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகள் அதற்கான மாணவர்களை பதிவு செய்தல் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் அது விஞ்ஞான பட்டபின்படிப்பு முதுமானி (MSc) பூர்த்தி செய்யாத ஆயினும் 25 சித்திகளை (Credit 25) பூர்த்தி செய்த மாணவர்களுக்காக SLQF நடைமுறையின் Early exit மற்றும் Fall back option பிரகாரம் வழங்கப்படும் பட்டமாகும். விவசாய விஞ்ஞான பட்டப்பின் நிறுவகத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் முதுமானி ஆராய்ச்சி (MSc), தத்துவமானி (MPhil) கலாநிதி (PhD) ஆகிய அனைத்து பட்டப்பின் படிப்புகளுக்கும் உரிய மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நிறுவகத்தினால் செயற்படுத்தப்படுவதுடன் அதன் பிரகாரம் முதுமானி ஆராய்ச்சி பட்டபின் படிப்பு பாடநெறிக்கு (MSc) உரிய மேற்கொள்ளப்படுகின்ற மேம்படுத்த செயற்பாடுகளின் போது கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து |

| | | |
|---|---|---|
| | | பாடநெறிகளும் மேவுகை செய்யப்படுகின்றது எனினும் சில பாடநெறிகளுக்காக கால நீதியில் கேள்வி குறைவடைவது காரணம் பாடநெறிகளுக்காக மாணவர்கள் குறைந்த அளவில் விண்ணப்பிப்பதுடன் அப்பாடநெறிகள் பொருளாதார ரீதியாக நடத்துவதற்கு முடியாமல் இருப்பதால் அம்மாணர்களுக்கு கல்வி சபைகளுக்கு தன்மையின் பிரகாரம் ஏனைய பாடநெறிகளுக்கு அவ்வாறே பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்<br>மேலும், அனைத்து பட்டப்பின் படிப்புகளையும் ஊக்குவிப்பதில், இந்த நிறுவனத்தின் இணையதளத்தை அடிப்படையாக உதவவும், பாடப்பகுதி தொடர்பான மாணவர்களுக்கு மின்னஞ்சல் செய்திகளை அனுப்பவும், குறுந்தகவல்களை அனுப்பவும், சமூக வலைப்பின்னல்கள் தொடர்பான நவீன தகவல் தொடர்பு கருவிகளைப் பயன்படுத்தவும் பயன்படும். மேலும், மாணவர்களுக்கு அறிவூட்டுவதற்காக, பல்கலைக்கழக அளவில் நடைபெறும் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளில் நிறுவனம் தொடர்ந்து பங்களிப்பதோடு, பட்டப் படிப்புகளை மேம்படுத்துவதற்கும் முதன்மையாக செயற்பட்டு வருகிறது. இவ்வாறு நடவடிக்கை எடுத்தமையால் பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியிலும் மிகவும் சிக்கலான 2022 ஆம் ஆண்டில் நிறுவகம் பட்டப்பின் பாடநெறிகளுக்காக 500 மாணவர்களுக்கு விஞ்சிய வகையில் பதிவுசெய்யும் இயலுமையை பெற்றுக் கொண்டது. |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி நாள் வரை, 03 முதல் 06 வருடங்கள் வரை காலதாமதமாக இருந்த விரிவுரைக் கட்டணமான ரூபா 28,608,077.00 தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | கணக்காய்வு வினாவில் கூறப்பட்ட 2015 முதல் 2019 வரையிலான காலத்திற்கான நிலுவையிலுள்ள விரிவுரைக் கட்டணத்தின் மதிப்பில் இருந்து இரண்டு கல்வியாண்டுகளின் முடிவில் செலுத்தப்படாத தொகை, நிதிப் பிரமாணங்களின்படி அந்தந்த ஆண்டுகளில் உள்ள வருமானக் கணக்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. மேலும், செலுத்த வேண்டிய தொகைகள் தொடர்பான பணம் செலுத்துவதற்கான சமர்ப்பிப்புகளில், நிதிப் பிரமாணம 115 இன் படி, நிதிக் குழு, நிர்வாகக் குழு மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டு, கொடுப்பனவுகள் 2022 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன. இதற்கானவிளக்கம் கீழே தரப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | கல்வி யாண்டு / வருமானத்திற்கு எடுத்த ஆண்டு / வருமானமாக எடுத்த தொகை / **2022.12.31** இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை<br>2015 / 2017 / 3,933,813.00 / 3,346,822.38<br>2016 / 2018 / 6,785,100.00 / 6,017,437.68<br>2017 / 2019 / 6,440,075.00 / 4,303,010.67<br>2018 / 2020 / 10,162,950.00 / 5,761,613.67<br>2019 / 2021 / 13,698,310.00 / 9,176,193.00 |
| (ஊ) | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சிலிருந்து 2018 சனவரி 30 ஆந் திகதி கிடைத்திருந்த ரூபா 354,201.00 தொகை 03 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது.<br>CPCG/KD/D/PGIA/2023/06) | 1978 ஆம் ஆண்டு முதல், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு விவசாய விஞ்ஞான பீடத்திற்கும், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான முதுகலைப் பட்டதாரி நிறுவனத்திற்கும் பயிர் விஞ்ஞானத் (Crop Science) துறையில் விவசாய ஆய்வுகள் மற்றும் களப் பிரயாணங்களுக்காக வருடாந்த மானியம் வழங்கி வருகின்றது. இது ஆராய்ச்சி மானியம் அல்ல. விவசாய ஆய்வுகள் மற்றும் களப்பயணங்களுக்கு இது ஆராய்ச்சி மானியம் அல்ல. இது கடைசியாக 2018 ஜனவரியில் பண மானியம் பெறப்பட்டது. அது ரூபா 250,000.00 ஆகும். முன்னைய ஆண்டுகளின் மீதமுள்ள பணத்துடன் 31.12.2022 இல் உள்ளவாறு ரூபா 354,200.93 மீதியொன்று உள்ளது. கடைசியாக 2019 ஆம் ஆண்டில் களப்பயண செலவினமாக ரூபா 23,860.00 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன்<br>அதன்பிறகு ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் காரணமாக கடந்த 3 ஆண்டுகளாக வெளியூர் பிரயாணமோ, அதுதொடர்பான நடவடிக்கைகளோ இல்லாததால், எந்தச் செலவும் செய்ய வேண்டியதில்லை. ஆனால் நாடு படிப்படியாக மீண்டு வரும்போது, இந்தப் பணம் விவசாய மற்றும் பயிர் விஞ்ஞானத் துறையின் எதிர்கால ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும். |

| | | |
|---|---|---|
| (எ) | International Development Research Centre (IRDC) இடமிருந்து ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,260,629.00 தொகை 02 ஆண்டுகளாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் (IDRC) மூலம் தொடர்ச்சியாக வெவ்வேறு செயற்திட்டங்களுக்காக விவசாய பொறியியல் கல்வி சபைக்கு மானியங்கள் வழங்கப்படுகின்றன இதுவரை IDRC மூன்று ஆராய்ச்சி செயற்திட்டங்கள் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இங்கே பட்டப்பின் படிப்பு மேற்கொள்ளும் விவசாய பொறியாளர் கல்விச்சபையின் சில மாணவர்களுக்கு பாடநெறிக கட்டணங்கள் மற்றும் உரிய அனைத்து கொடுப்பனவுகளும் ரூபா 37,100 ஆன மாதாந்த படிகள் மற்றும் அனைத்து ஆராய்ச்சி செலவினமும் இருக்கின்றது தற்போது இந்த ஆராய்ச்சிக்குரிய மாணவர்கள் ஆராய்ச்சியை பூர்த்தி செய்து இறுதிக் கட்டத்தில் உள்ளனர் அதன்படி 2023 ஆம் ஆண்டின் போது அனைத்து செலவினங்களும் பூர்த்தி செய்யப்பட்டு IDRC முதலாவது ஆராய்ச்சி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யும் முயலுமே காணப்படுகிறது இந்த ஆராய்ச்சி நிதியத்திலிருந்து 2020 ஆம் ஆண்டின் போது 53,824.00 தொகையும் 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 22,026.00 தொகையுமாக ஆராய்ச்சி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 208,693.00 ஆன மிகை இருப்பு இருப்பு பதிவேட்டிற்கு உடபடுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | 2022.12.31 இல் உள்ளவாறு இருப்பு மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இருப்பு புத்தகங்களுக்கு அதுவரை உள்ளடக்கப்பட்டுள்ளதாக 208,6933.00 ஆன பொருட்கள் இருப்பு பதிவேற்றில் உள்ளடக்கப்பட்டு சரியாக எழுதிக் கணக்கு கணக்கிடப்பட்டு இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டன. இந்த இருப்பில் அதிக கேள்வி இல்லாத மிகவும் பழமையான இருப்புக்களும் உள்ளடங்கப்பட்டுள்ளன |
| (ஐ) | முறையான இடமாற்ற கொள்கையொன்றின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படாமையால் 22 உத்தியோகத்தர்கள் 05 ஆண்டுகள் முதல் 34 ஆண்டுகள் வரையான காலப்பகுதியல் ஒரே இடத்தில் சேவையாற்றி வந்தனர்.<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | விவசாய விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனம் பேராதனை பல்கலைக்கழகத்தின் இணைந்த நிறுவனம் ஒன்றாக இருந்த போதிலும் நிறுவனத்தின் சேவை புரியும் பதவியணியினரை இடமாற்றம் மேற்கொள்ளும்போது பேராதனை பல்கலைக்கழற்றுடன் நேரடியாக மேற்கொள்ள முடியாது இருந்ததுடன் பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழு ஊடாக செய்சதற்கு நிரந்தர இடமாற்றல் கொள்கையொன்று தயாரிப்பது நிறுவகம் முகங்கொடுத்துள்ள சிக்கலாகும். |

| | | |
|---|---|---|
| | | அவ்வாறே தற்போது நிறுவனத்தின் தேவைப்பாட்டின் பேரிலும் வெவ்வேறு பிரிவுகளின் செயற்திறனை அதிகரிக்கும் நடைமுறை ஒன்றாக உள்ள இடமாற்றல் நடைமுறை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது |
| (ஒ) . | உரிய கவனம் மற்றும் மேற்பார்வையின்றி நிர்வகித்ததன் காரணமாக நிறுவனத்தின் ஆராய்ச்சி செலவுகளை , இலங்கை வங்கியின் 0001273337 ஆம் இலக்க இலங்கை வங்கியின் நடப்புக் கணக்கு இலக்கத்தில் மீளாய்வு ஆண்டின் கடைசி நாளில் பெறப்பட்ட தொகையை விட ரூபா 27,872.00 செலவிடப்பட்டுள்ளது. . .<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2023/06) | ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்யப்படுகின்ற இலங்கை வங்கியின் 0001273337 ஆம் இலக்க கணக்கில் 2022 திசெம்பர் மாதம் கொடுப்பனவு செய்யும் போது காசேட்டில் மாத்திரம் கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது அது வங்கி மேலதிக பற்றினை உருவாகி இருக்கவில்லை<br>ஏ. பீ. என் செயற்திட்டம், கப்நெட் செயற் திட்டம், ஐ டி ஆர் சி செயற்திட்டம் ஆகிய செயற் திட்டங்களின் போக்குவரத்து செயற்பாடுகளுக்காக நிறுவகத்தின் வாகனங்கள் பயன்படுத்தியதன் பேரில் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய அளவிற்காக செய்யப்பட்ட கொடுப்பவர்கள் காரணத்தினால் இந்த கூடுதலான காசோலை எழுத நேர்ந்தது ஆண்டின் இறுதி கணக்கு நடவடிக்கைகளுக்காக இதனை செய்து அவசியம் என்பவற்றால் குறித்த காசோலை எழுதி வங்குக்கு சமர்ப்பிக்கப்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது ஜனவரி மாதம் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது இதன் பிரகாரம் வங்கி கணக்கில் பற்றி உருவாகியிருக்கவில்லை. |
| (ஒ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீடு 2022 நவம்பர் 25 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டிருக்கையில் 24 வருமானத் தலைப்புகளுக்குரிய பாதிடப்பட்ட வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் பாதிடப்பட்ட செலவினம் உள்ளவாறான செலவினம் என்பவற்றிற்கு இடையே 32 சதவீதம் முதல் 209 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்மான முகாமைத்துவ கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது..<br><br>(தொடர்பு - CPCG/KD/D/PGIA/2022/60) | மீளாய்வாண்டிற்காக பாதீட்டினையில் தயாரிக்கும் போது பொதுச் திறைசேரியின் அங்கீகாரத்தின் பேரில் கிடைத்த பணம் மற்றும் பயன்படுத்தக்கூடிய பணம் என்பவற்றை கருத்தில் கொண்டு கிடைத்த நிதிய வருமானமாக கருத்திற் கொள்ளப்பட்டது எனினும் நாட்டில் காணப்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடி அடிப்படையில் அங்கீகாரம் கிடைத்த மீண்டெழும் செலவினத்திற்கான ஏற்பாடும் குறைக்கப்பட்டதுடன் மூலதன செலவினத்தின் நிதி ஏற்பாடுகளில் எந்த ஒரு தொகையும் கிடைக்கவில்லை<br>இதன் பிரகாரம் வரவு தரப்பு மேலும் திருத்த வேண்டி இருந்தது அவ்வாறே 2021 திசெம்பர் மாதம் மற்றும் 2022 ஆரம்ப மாதங்களில் கட்டளையிடப்பட்ட அதாவது நவம்பர் மாதம் வரை எந்த ஒரு பொறுப்பேற்றலும் இல்லாமல் அதிக விலையில் இயன்ற காரணங்கள் |

| | | |
|---|---|---|
| | | இரண்டாவது டிசம்பர் மாதம் வரை நாட்டில் காணப்பட்ட டொலர் சிக்கல்கள் போன்றவற்றால் சலுகை அளிக்கும் போது எமது நிறுவனத்திற்கு வழங்குவதற்கு வழங்குனர்கள் செயற்பட்டனர் அவ்வாறு அநேகமான மீண்டெழும் செலவினங்கள் டிசம்பர் மாதத்தின் போது எதிர்பார்க்காத விதத்தில் செலவிட நேர்ந்தது இதன் பிரகாரம் செலவின தலைப்புகளும் திருத்தங்களுடன் பின்னர் வேறுபட்டது நாட்டில் காணப்பட்ட அசாதாரண பொருளாதார சிக்கல், டொலர் பிரச்சினை, அதிக பணவீக்கம் வீக்கம் மற்றும் வரி விதித்தல் அடிப்படையில் பாதீட்டு சிறந்த கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்த எமக்கு முடியாமல் இருந்தது<br><br>**பாதீட்டுக் கட்டுப்பாடு**<br><br>பாதீட்டு விலகலுக்கு கீழே காட்டப்பட்டுள்தன் பிரகாரம் தெளிவுபடுத்தலாம்<br><br>**முதலீட்டு வருமானம்** - 2022 ஆம் ஆண்டின் போது நிலையான வாய்ப்புக்கள் முதிர்ச்சி அடையும் போது கூடிய நிலையான வைப்பு வட்டி விகிதத்தின் கீழ் மீண்டும் முதலீடு செய்வதற்காக முதலீடு வட்டி மிகைத்துள்ளது ஆண்டின் இரண்டாவது அரையாண்டில் நிலையான வைப்பு வட்டி விகிதங்களில் தெளிவான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.<br><br>**ஆதனங்களை வாடகைக்கு வழங்குதல்** - 2022 கல்வியாண்டின் இறுதியில் நாட்டில் பொருளாதார நிலைமைக்கு வந்ததால் சுற்றுலா விடுதியின் வருமானம் அதிகரித்ததன் பேரில் இந்த வருமானம் அதிகரித்தது.<br><br>**தவணை கட்டணங்கள்** 2021 கல்வி ஆண்டு இல்லாமல் ஆக்கப்பட்டதன் பெயரில் அவ்வாண்டில் இணைந்த மாணவர்களுடன் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் அளவு கருத்திற் கொள்ளக் கூடிய அளவு அதிகரித்ததால் அவர்களால் செலுத்தப்பட்ட தவணைக் கட்டண் வருமானம் அதிகாரத்திருந்தது |

| | | |
|---|---|---|
| | | **பாடநெறிக் கட்டணங்கள்** 2021 கல்வி ஆண்டு இல்லாமல் ஆக்கப்பட்டதன் பெயரில் அவ்வாண்டில் இணைந்த மாணவர்களுடன் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் அளவு கருத்திற் கொள்ளக் கூடிய அளவு அதிகரித்ததால் அவர்களால் செலுத்தப்பட்ட தவணைக் கட்டண வருமானம் அதிகரித்திருந்தது.<br><br>**வெளியீடுகளின் விற்பனை** மதிப்பீடு செய்யப்பட்ட வகையில் வெளித் தரப்பினர்களும் மாணவர்களும் நிறுவகத்திற்கு வருதல் குறைந்தமை மற்றும் முன்னைய ஆண்டுகள் உட்பட வெளியீடுகளை கொள்வனவு செய்யாமல் காரணமாக குறித்த வருமானம் குறைவடைந்தும் ஏற்பட்டது<br><br>**வெளி நிறுவனங்களுக்கு வழங்கிய சேவைகள்** இது பிரதான வருமானம் ஒன்றாக நிறுவனத்தின் வாகனங்கள் வெளி நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் வழங்குவது ஊடாக கிடைக்கும் பணமாகும் நிறுவனத்தின் ஆராய்ச்சி மானிய நிதியத்தின் கீழ் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களால் பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைகளுக்காக ஒரே தடவையில் கொடுப்பனவு செய்தமை காரணமாக இவ்வருமானம் அதிகரித்தது<br><br>**செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள்** - 2022 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையும் பேரில் செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்படுவது குறைவடைந்தமை மற்றும் இடை நிறுத்தப்பட்டமை காரணமாக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானம் குறைவடைந்தது.<br><br>**கொழும்பு கிளையின் வருமானம்** 2022 ஆம் ஆண்டுக்காக கொழும்பு கிளைக்காக மாணவர்கள் பதிவு செய்வதில் அதிகரித்து இருப்பதால் முன்னைய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் கிடைத்த வருமானம் மற்றும் இவ்வாண்டின் வருமானம் ஆகிய இரண்டினாலும் கொழும்பு கிளையின் வருமானம் அதிகரித்துள்ளது.<br><br>**பணிக்கொடை படிகள்** பணிக்கொடை படிகள் மதிப்பீடு 05 ஆண்டு சேவைக் காலத்தினை பூர்த்தி செய்த ஊழியர்களைக் கருத்திற் |

| | | |
|---|---|---|
| | | கெர்ணடு மதிப்பிடப்படுகிறது. அத்துடன் முன்னைய ஆண்டின் செலவினமும் கருத்திற் கொள்ளப்படுகின்றது. அதற்கு இணங்க மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் கணிப்பிடப்பட்ட கழிவு பெறுமதி குறைவடைந்ததன் பேரில் இச்சலவினம் குறைவடைந்தது.<br><br>**தொடர்பாடல் படிகள்** மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அரச கொள்கைகள் மற்றும் உரிய படிகள் செலுத்தும் அளவு குறைவடைந்துமையால் ஆண்டில் குறித்த செலவினத்திலும் குறைவொன்று ஏற்பட்டிருந்தது.<br><br>**உள்நாட்டு பிரயாணச் செலவினம்** - மதிப்பிடப்பட்ட வகையில் ஆண்டின் பிரயாணச் செலவினம் இடம்பெறாமையால் ஆண்டில் உரிய செலவினம் குறைவடைந்து.<br><br>**எழுது கருவிகள் மற்றும் அலுவலக தேவைகள்** - 2022 ஆம் ஆண்டின் போது எழுதுகருவிகளின் விலை அதிகரித்ததன் பேரில் அனைத்து பிரிவுகளும் பயன்படுத்திய எழுது கருவிகளை உபயோகித்து பிரதிகள் மேற்கொள்ளப்பட்டதன் மூலம் கொள்வனவு செலவினம் குறைவடைந்து முன்னைய ஆண்டுகளின் செலவினம் கருத்திற் கொள்ளக் கூடிய அளவு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும் பெருகை திட்டத்தின் பிரகாரம் ஆண்டுக்கு இரண்டு முறை எழுதுகருவி கொள்வனவு செய்வதால் விலை அதிகரித்தமையால் ஒரே தடவையில் மாத்திரம் கொள்வனவு செய்தமையால் குறித்து செலவினம் சேமிக்கப்பட்டு இருந்தது<br><br>**சீருடைச் செலவினம் - 2002** ஆம் ஆண்டு சீருடை செலவினங்களுக்குரிய பட்டியல் நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்படாமையால் 2022 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் இரண்டு ஆண்டுகளுக்குரிய அது வேறாக்க முடியாமையால் குறித்த செலவினம் 2022 ஆண்டின் செலவினத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது. குறித்த செலவினத்தில் அதிகரிப்பு இடம் பெற்றுள்ளது. |

| | | |
|---|---|---|
| | | **இயந்திர பொறிகள் பராமரிப்பு** எமது நிறுவனத்தின் நிழற்பட பிரதி எடுக்கும் இயந்திரம் பழமையாக இருப்பதால் அடிக்கடி திருத்தம் செய்வதற்கு நேர்தமை அச்சீட்டு இயந்திரங்கள் உட்பட ஏனைய இயந்திரங்கள் சில செயலற்று மற்றும் தேய்ந்த பகுதிகளை மாற்றுவதற்கு நேர்ந்தமை வருடாந்த சேவை உடன்படிக்கைகளுக்காக கொடுப்பனவு செய்யும் போது மதிப்பீடு செய்த தொகையை விட கூடுதலான தொகையொன்று செலவிடப்பட்டமையால் உள்ளவாறான செலவினம் அதிகரித்தது.<br><br>**பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சுற்றுலா மானியம்**<br>இது விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கற்பித்தலுக்காக வருகை தரும் வருகை விரிவுரையாளர்களின் பிரயாண செலவினம் ஆகும். முன்னைய சில ஆண்டுகளில் இச்செலவினம் மிகக் குறைவடைந்ததன் பேரில் மதிப்பீடு செய்யப்பட்ட போதும் பிரயாணச் செலவின கோரிக்கை அதிகரித்தால் செலவினமும் அதிகரித்துள்ளது.<br><br>**கல்வி ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்** கல்வி ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளுக்கான செலவினம் செலவினத்திற்காக செய்யப்பட்ட கோரிக்கை எதிர்பார்த்த மட்டத்தை விட குறைவடைந்தமை செலவினம் அதிகரித்துள்ளது.<br><br>ஊழியர் அபிவிருத்தி முன்னைய ஆண்டுகள் மற்றும் அதனுடன் ஒப்பிபடும் போது மதிப்பிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் போது குறித்த செயற்பாடுகள் செயல்படாமை காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே குறைவு ஒன்று அவதானிக்கப்பட்டது<br><br>**விடுமுறை புகையிரத ஆணைச்சீட்டு** முன்னைய ஆண்டுகள் மற்றும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டின் தவணை பருவச் சீட்டு எண்ணிக்கை அதிகரித்தமை காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான செலவினர்களுக்கு இடையே அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது<br><br>**விளையாட்டு செயற்பாடுகள்** திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிப்பாளர் வெற்றிக் கிண்ணம் மற்றும் ஏனைய விளையாட்டு |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கைகளுக்காக மேற்கொள்ள முடியாமை காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் உள்ளவரான செலவினத்திற்கு இடையே குறைவு என்று அவதானிக்கப்பட்டது<br><br>**வங்கி கட்டணங்கள்** முன்னைய ஆண்டுகள் மற்றும் அதனுடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்ட போதும் 2002 ஆண்டின் அட்டைகள் மூலம் கொடுப்பனவு அதிகரித்தமை மற்றும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது<br><br>**பரீட்சை கட்டணங்கள்** முன்னைய ஆண்டுகள் மற்றும் அதனுடன் மதிப்பீடு செய்யப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டில் பரீட்சை கட்டணங்கள் அதிகரித்தமை காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது<br><br>**ஏனைய மீண்டெழும் செலவினம்** சட்டரீதியான செலவினத் தலைப்புகளுக்கு புறம்பாக எழக்கூடிய செலவினங்கள் குறைவவடைந்மையால் அதற்காக ஒதுக்கிடப்பட்ட நிதி குறைவடைந்தது<br>**பட்டமளிப்பு விழா செலவினம்** பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பட்டமளிப்பு விழாவிற்கு உரிய பணக் கோரல்கள் வேண்டப்படாதமையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி சேமிக்கப்பட்டது.<br><br>**கல்வி சுற்றுலா செலவினம்** முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதும் 2022 ஆம் ஆண்டின் கல்வி சுற்றுலா செலவினம் குறைவடைந்தமை காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே குறைவொன்று ஒன்றும் அவதானிக்கப்பட்டது. |

**பணிப்பாளர்**
**விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம்**

## 34th Annual Congress - 2022







## Blood Donation Campaign - 2022

